# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE

# මැතිවරණ ප්‍රචණ්ඩත්ව නිරීක්ෂණ මධ්‍යස්ථානය

# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

105 - 5th Lane, Colomo - 03, Sri Lanka
Tel: +94 11 2564404, Fax: +94 11 4722632
**E-mail:** cmev@cpalanka.org **Website:** http://cmev.wordpress.com

## தென்மாகாண சபைத் தேர்தல் - 2009

### ஊடக அறிக்கை இல - 04

**2009 – ஒக்டோம்பர் 05**

**05 ஒக்டோபர், 2009 கொழும்பு இலங்கை** தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) இதுவரையில் 64 தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்களை உறுதிப்படுத்தியுள்ளது. இவற்றுள் 18 சம்பவங்கள் பாரிய வன்முறைச் சம்பவங்களாகவும் 46 சம்பவங்கள் பாரியதற்ற வன்முறைச் சம்பவங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. கூடுதலான வன்முறைச் சம்பவங்கள் காலி மாவட்டத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்ற 17 பாரிய வன்முறைச் சம்பவங்களுள் 11 வன்முறைச் சம்பவங்கள் இம்மாவட்டத்திலிருந்து அறிவிக்கப்படுகின்ற அதே வேளை மொத்தமாக கிடைக்கப்பெற்றுள்ள 63 சம்பவங்களுள் 28 சம்பவங்கள் காலிமாவட்டத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளன. தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) 22 வன்முறைச் சம்பவங்களை அம்பந்தோட்டை மாவட்டத்திலிருந்தும் 14 வன்முறைச் சம்பவங்களை மாத்தறை மாவட்டத்திலிருந்தும் இதுவரையில் பதிவுசெய்துள்ளது.

**வாக்களிப்பில் ஆர்வமின்மை – தெனியாய தேர்தல் தொகுதி, மாத்தறை**

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) களக் கண்காணிப்பாளர் தெனியாய தேர்தல் தொகுதியின் ரிதியாலை கிராமத்தில் வாக்காளர்களின் பகிஷ்கரிப்பு தொடர்பான சம்பவம் ஒன்றை அறிவித்துள்ளார். கட்சிபேதமின்றி அரசியல்வாதிகள் மீதான அவநம்பிக்கையின் வெளிப்பாடாகவே இச்சம்பவம் அமைந்து காணப்படுகின்றது. தமது கிராமத்துக்கு செல்லும் பாதையை புனர்நிர்மானம் செய்வது தொடர்பாக பல்வேறு அரசியல்வாதிகளால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை காரணமாக தமது பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள அணைத்து கட்சிக் காரியாலயங்களையும் நீக்குவதற்கு கிராமத்தார்கள் நடவடிக்கை மேற்கொண்டதாக தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) களக் கண்காணிப்பாளர் அறிவித்துள்ளார்.

தமது பாதை தொடர்பான புனர்நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்படும் வரையில் எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் ஆதரவளிப்பது இல்லையென கிராமத்தார்கள் தீர்மானித்துள்ளனர். அக்கிராமத்தின் கிராம சேவை உத்தியோகத்தர் 407 குடும்பங்கள் அவ்வூரில் வதிவதாகவும் 1088 வாக்காளர்கள் அங்கு காணப்படுவதாகவும் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) தெரிவித்தார்.

4ம் திகதி தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) கிடைத்த அறிக்கைகளின் படி அதிகாரிகள் பாதை புனர்நிர்மானப்பணிகளை துரிதப்படுத்தியுள்ளதாக தெரியவருகின்றது. பாதையின் இரு மருங்கிலும் கல் மற்றும் ஏனைய மூலப்பொருட்கள் குவிக்கப் பட்டுள்ளதாக தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) களக் கண்காணிப்பாளர் அறியத்தருகின்றார். கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின்படி கிராமத்தில் அமைந்துள்ள விஹாரையில் புணர்நிர்மான பணிகள் தொடர்பான விபரங்களை விளக்கப்படுத்துவதற்காக கூட்டமொன்று நடைபெற்றதாகவும் கூட்டத்தில் மாகாணசபையைச் சேர்ந்த பொறியியலாளர் மற்றும் இன்னும் சில அதிகாரிகள் பங்குபற்றியதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மேற்கூறிய நிலைமை அரசியல் வாதிகள் மீதான சமூகத்தின் அவநம்பிக்கையை பிரதிபலிக்கின்றது. மேலும் ஜனநாயகத்தின் செயற்படாதன்மையையும் இச்சம்பவம் சுட்டிக்காட்டுகின்றது. இத்தகு நிலைமைகள்

கருத்திற்கொள்ளப்பட்டு தீர்வுகள் வழங்கப்படாதவிடத்து நாட்டில் நிலவும் பிரதிநிதித்துவ ஜனநாயக முறைமை மீது பல்வேறு பாரிய விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

**மாத்தறை, தெனியாய பிரதேசத்தில் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல்**

ஒக்டோபர் 04ம் திகதி காலை 11.00 மணியளவில் ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் ஆதரவாளர்கள் குழுவொன்றும் பெவரெலிய தோட்டத்தில் வைத்து துறைமுக அபிவிருத்தி அமைச்சர் திரு. டிலான்பெரேரா அவர்களின் தலைமையில் வந்த ஐ.ம.சு. முன்னணி ஆதரவாளர் குழுவொன்றினால் தாக்கப்பட்டுள்ளதாக தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் சாகல ரத்னாயக்க, ஐ.தே.க வின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ரவி கருணாநாயக்க, பாலித ரங்க பண்டார மற்றும் லக்ஷ்மன் கிரியல்ல உள்ளிட்ட பாராளுமன்ற அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் எனசல் தோட்டம் மற்றும் பெவரெலிய தோட்டம் ஆகிய பிரதேசங்களை சேர்ந்த வாக்காளர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் மகநெகும திட்டத்தின்கீழ் தனியொருவருக்கு அமைக்கப்பட்ட பாதையொன்றை கண்காணிப்பதற்காக சென்றுகொண்டிருந்த வேளையில் துஷித ரணவக என்பரால் வழிமறைக்கப்பட்டதாக குறிப்பிட்டார். மேலும் பாதைக்கு குறுக்காக அவர்களது பயணத்தை தடைசெய்யும் வகையில் லொறி ஒன்று நிறுத்தப்பட்டிருந்ததாகவும் அவர்கள் முன்னே செல்ல அனுமதிக்கப்படவில்லை என்பதால் திரும்பிவர முயற்சி செய்த பொழுது டிலான் பெரேரா தலைமையில் வந்த ஐ.ம.சு. முன்னணி ஆதரவாளர் குழு ஐ.தே.க ஆதரவாளர்களையும், ஊடகவியலாளர்களையும் தாக்கியதுடன் அவர்களது வண்டிகளை சேதப்படுத்தியதாகவும் தெரிவித்தார்.

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) திஸ்ஸ அத்தநாயகவை தொடர்புகொண்ட பொழுது தெனியாய பொலிஸிலோ அல்லது மாத்தறை பொலிஸிலோ இதுவரையில் தாம் முறைப்பாடொன்றை மேற்கொள்ளவில்லை எனவும் கொழும்பு பொலிஸ் தலைமை அலுவலகத்தில் இது தொடர்பான முறைப்பாடொன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்ததுடன் ஐ.ம.சு.முன்னணியின் தெனியாய ஒருங்கமைப்பாளர் இச்சம்பவத்தில் தலையிட்டு நிலைமையை சுமுகப்படுத்தி அங்கிருந்து வெளியேறுவதற்கு உதவியதாகவும் தெரிவித்தார்.

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) அமைச்சர் டிலான் பெரேரா அவர்களை தொடர்புகொண்டபொழுது இக்குற்றச்சாட்டை முற்றுமுழுதாக மறுத்ததுடன் அவர்கள் துஷித ரணவக்க அவர்களின் வீட்டுக்கு தேநீர் விருந்து உபசாரமொன்றுக்கு அழைக்கப்பட்டிருந்ததாகவும் அங்குசென்றுகொண்டிருந்த வேளையில் ஐ.தே.க வின் வாகன அணி அவர்களது பயணத்திற்கு இடையூராக அமைந்து காணப்பட்டதினால் தனது பாதுகாப்பு உத்தியோகத்தர்களை வாகனங்களை அப்புறப்படுத்துமாறு வேண்டியதாகவும் குறிப்பிட்டதுடன் தமது பாதுகாப்பு அதிகாரிகளே ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கு வாகனங்களை அப்புறப்படுத்த உதவியதாகவும் தெரிவித்தார். மேலும் தானோ அல்லது தனது ஆதரவாளர்களோ எவ்வித வன்முறையிலும் ஈடுபடவில்லையெனவும் குறிப்பிட்டார்.

தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள இவ்வேளையில் நிலவுகின்ற பதட்ட சூழ்நிலையானது மேலும் அதிகரிக்கலாம் என்ற அடிப்படையில் அரசியல் கட்சிகள், தேர்தல்ஆணையாளர், மற்றும் பொலிஸார் ஆகியோரை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் எவ்வித தடையூறுகளுமின்றி மக்கள் வாக்களிக்க கூடிய சூழலொன்றை உறுதிப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) அழைப்பு விடுக்கின்றது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) 1997 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இந்நிறுவனம், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் INFORM மனித உரிமைகள் தொடர்பான ஆவணப்படுத்தல் நிலையம் ஆகிய நிறுவனங்களின் ஒன்றியமாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் செயலகமாக செயற்படுகின்றது.

துசித்த சிறிவர்தன (சட்டத்தரணி)
தேசிய இணைப்பாளர்.